
# மகுட வைரங்கள்

கவிஞர் நித்தியஜோதி



Published by:
Gowri Shankar Pillai
Internet Tamil Literary Society
Badulla.

# மகுட வைரங்கள்

(நவீன கவிதைகள்)

கவிஞர் நித்திஜோதி

# මගුඩ වෛරංගල්

කවි: නිත්තියජෝදි
(ශ්‍රී.ල.වි.සේ)

வெளியீடு:
ප්‍රකාශනය:

Gowri Shankar Pillai
Internet Tamil Literary Society
Badulla.


## பதிவுத் தரவுகள்


| | |
|---|---|
| தலைப்பு : | மகுட வைரங்கள் |
| நூல் : | நவீன கவிதைகள் |
| படைப்பு : | கவிஞர் நித்தியஜோதி<br>பௌர்ணமி இலக்கிய வட்டம்.<br>பூனாகலை. |
| பதிப்பாசிரியர் : | ஜனாப். ஜெ. பௌஸர் நியாஸ்<br>தமிழ் இலக்கிய ஆய்வு மன்றம்.<br>இல:107/A. வெளிமடை வீதி.<br>அப்புத்தளை. |
| கணனி வடிவமைப்பு : | கெவினா கிரபிக்ஸ்.<br>இல:17. ஐக்கிய வர்த்தக கட்டிடம்.<br>பிரதான வீதி. பண்டாரவளை. |
| அட்டை படஅமைப்பு : | எ. என்தனி குரூஸ் |
| வெளியீட்டு பதிப்பகம் : | W.A.S. அச்சகம் - பண்டாரவளை. |
| பக்கங்கள் : | 72 |
| விலை : | ரூபா 200- |

## BIBLIOGRAPHICAL DATA

| | |
|---|---|
| Title : | MAKUDA VAIRANGAL |
| Category : | Poem |
| Author : | Kavignar Nithiyajothy<br>Powrnamy Ilakiya Vattam,<br>Poonagal. |
| Copyrights : | Janaf. J. Pawserniyas,<br>Tamil Literary Research Society.<br>No.107/A, Welimada Road, Haputale. |
| Computer Designing : | Kevina Graphics,<br>No17, United Shopping Complex,<br>Main Street, Bandarawela. |
| Cover Design : | A.Antony Croos, |
| Printed : | W.A.S Prenters - Bandarawela. |
| Pages : | 72 |
| Price : | Rs. 200/= |

# சமர்ப்பணம்...!






பெனடிக் பாலன்
அவர்களுக்கு

முற்போக்கு எழுத்தாளரும், இலங்கைத் தீவில் முதன்மை ஆசிரியர்கள் உருவாக காரணமானவருமான கல்வியியலாளர் அவர்கட்கு

---

அன்று யாழில் எழுதிய ஆசிகள்....



# வெளியீட்டு உரை!

இணைய தளத்தில் இலக்கியங்களைத் தேடி தகவல்களை சேகரித்த அனுபவம் கவிஞர் நித்தியஜோதி அவர்களுக்கு உண்டு. 'வாழ்க்கை' என்னும் இணைய பத்திரிகையை நெனசல நிலையம் ஊடாக வெளியிட்டு இலங்கை முழுவதும் இணைய வாசகர்களுக்கு இலக்கியம் வாசிக்க தந்தவர் கவிஞர்.

அவர் கல்வியமைச்சில் பிரதிக்கல்வி அமைச்சின் ஊடகச் செயலாளராக கடமை புரிந்த காலங்களில் தினகரன், வீரகேசரி, தினக்குரல், சுடர் ஒளி போன்ற தினசரிகளில் செய்திகள், கட்டுரைகள், நேர்காணல்களை எழுதி வந்துள்ளார்.

நவீனகாலத்திற்கேற்ப தகவல் தொழிற்நுட்பம், இணையம் என்பவற்றில் ஈடுபாடும், அவற்றின் பயன்பாடும் தமிழ் இலக்கிய துறையில் பிரயோகிக்கப்பட வேண்டும் என்ற ஆவல் அவரிடம் அதிகமாகவே காணப்படுகின்றது. அவரின் கவிதை நூல் ஒன்றை எமது இணைய தமிழ் இலக்கிய மன்றம் ஊடாக வெளியிடுவதில் நான் பெருமை படுகிறேன்.

வாழ்க கவிஞன்,
வளர்க கவிதை,
போற்றுவோம் தமிழ் இலக்கியம்!

இப்படிக்கு,
கௌரிசங்கர் பிள்ளை.

3 வது மைல் கல்,
பதுளை,
இலங்கை.



# அணிந்துரை

ஏகாதிப்பத்திய ஆதிக்கத்தின் விளைவால் பொருள்தேடி, சுகம் தேடி, வந்த இம் மலை வாழ் மக்கள் தம்மோடு தம் பண்பாட்டையும், கலை கலாசாரங்களையும் மூட்டைக்கட்டி கொண்டவந்தவர்கள் அவற்றின் எச்சங்களை, சொச்சங்களை இம்மக்கள் வாழும் எப்பிரதேசங்களிலும் நாம் காணலாம். அந்த வகையில் இந்த மக்களுக்கே சொந்தமான காமன் கூத்தையும் படுகள திருவிழாவையும் பற்றி பாடிய அவரது கவிதைகள் அந்த மக்களின் பண்பாட்டுத்தளங்களின் பதிவுகளாகவும், அம்மக்களை ஆழமாக நேசிக்கும் உணர்வு கொண்டவையாக காணப்படுகின்றன.

தொழிலாளர் துயில் மனை என்ற கவிதையில் அந்நியர் ஆதிக்கத்தில் அகப்பட்டு சிக்கித் தவித்த தொழிலாளர் வர்க்கத்தின் அடிமைத் தனத்தையும், சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பது போன்ற அவர்களது நாற்பத்தெட்டுநாள் போராட்டத்தையும் எம் கண்முன்னே கொண்டுவருவது தொழிலாளர்கள் கொடுமைகள் வெள்ளையரின் வெளியேற்றம் பற்றிய அவரது சிந்தனை மலையகத் தொழிலாளர்களின் இதய குமுறல்களின் தெளிப்பாக வெளிவருகிறது.

காட்டில் தெரிந்த குடிசைக்கு
நெருப்பை மூட்ட
சவுக்கு எடுத்து குமரிகயின்
பின்புறம் அடிக்க
வேனும் என்பான்.!
தொழிற் சங்க கொடி கழற்றி
குப்பை மேட்டில் ஏறிச் சொன்னான்

தொழிலாளர் வர்க்கத்தின் சக்தி, ஒன்றினையும் போது அது அத்தகு அதிகார, அடக்கு முறை வாதங்களையும் ஆட்டம் காண செய்யும் என்பது உண்மை. உலக போராட்டங்களில் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டங்களை வெற்றியின் எல்லைகளை கண்டவை. எனவே இந்த தொழிலாளர் பரம்பரை ஒன்றுபட்டு திகழ வேண்டும் என்ற அவரது உணர்வு இதழ்கஸ்ஹின்னை தேயிலை தொழிற்சாலை என்ற

கவிதையின் பரினமிப்பதை காணமுடிகிறது.

இங்கிலாந்து அரண்மனை
பதுளை தேயிலை குடித்து
மகிழ்கின்றது என்று
மார்தட்டுபவனே!

வைரங்களாக இத்தகைய பார்வையுடன் அவரது மகுட முகம்காட்டி நிற்கும் கவிதைப் பூக்களின் மணத்தை நுகரச் செல்லும் போது உழைக்கும் பதுளை மக்களின். கலை கலாசாரத்தையும். வர்க்கப் போராட்டங்களையும் முனைப்பாக கொண்டு வீறுநடை போடுவதை காணமுடிகிறது. மறந்து போன சம்பவங்களின் மீள் பரிசோதனையாக தொழிலாளர் வர்க்கத்தின் எழுச்சிகளின் தாக்கத்தை இளைய சமுதாயத்துக்கு எடுத்துச் சொல்வதாக அமைகிறது.

மேலும் பேராதனை தமிழ்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி வ. மகேஸ்வரன் அவர்கள் அடிக்கடி கூறுவதுபோல் தொழிலாளர் பிரச்சனையை தொழிலாளரே பேசவேண்டும். பெண்ணை. பெண்ணாக பார்க்கவேண்டும். போன்ற சிந்தனைகளின் யதார்த்தத்தை கவிஞரின் கவிதைகளில் காண்பதாக நான் உணர்கிறேன். அவரது பெண்னிலை வாத சிந்தனைகளில் பெண்களின் மனவியல் சார்ந்த. பாலியல் சார்ந்த சிந்தனைகளை தொட்டுக்காட்ட முயற்சிக்கிறார்.

கவிஞன் எல்லைகளை கடந்தவன். புதுமைகளின் விளைநிலம். துருவி சோதிப்பதில் வல்லவன். என்பதன் உள்ளார்ந்த அர்த்தத்தை அவரிடம் காணமுடியும். இணையத் தளங்களுக்கும் சென்று இலக்கியத்தை தேடும் 'கவிஞரின் அந்த தேடல் உணர்வின் வெளிப்பாடுகளை அவரது கவிதைநூலும் அடையாளம் காட்டி நிற்கின்றது. அவரது கவிதை நூல் நவீன நுட்பத்தை நாடியுள்ளது. புகைப்படங்கள். முத்திரைகள். தன் கவிதைக்கருவில் காட்சி நிலை வடிவங்கள் என்பவற்றை பரவலாக காணக்கிடைக்கும் அழகிய படைப்பாகும்.

பாறை விரிப்பு பக்கத்தில்
சல சல நீர் ஊற்று

ஊதல் காத்து ஊடல் செய்து
விளக்கை அசைத்தது!
வேடிக்கைச் செய்தது!
ஒளியை காப்பற்ற
கைகளை இணைத்து
கஸ்டப்பட்டபோது!
விளக்கு விழுந்தது!

கவிஞர் நித்தியஜோதியின்

இவரது நூல் ஊவா இலக்கிய உலகிற்கு ஒரு புதிய உதயத்தைக் கொடுக்கும். பல நூல்களுக்கு வித்திடும். சோர்ந்து வீழ்ந்து கிடக்கும் பதுளை மாவட்ட இலக்கிய வாதிகளை தட்டியெழுப்பும். ஆவேசம் கொள்ளச் செய்யும். ஆர்ப்பரிக்கச்செய்யும் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

என்றும் கவிதை வாழ வாழ்த்தும்:
ஆறுமுகம் கலையரசு (M.A & M.Ed)
(முதுக்கலை மாணி - பேராதனை)
(முது கல்வி மாணி - வந்தாறுமுனை)
தலைவர், பௌர்ணமி கலை இலக்கிய வட்டம் - பூனாகலை





## பதிப்பாசிரியரின் உரை..

தேசற்கு மகுடம் நிகழ்ச்சி திட்டத்தை முன்னிட்டு வெளிவருகின்ற, கவிஞர் நித்திய ஜோதி அவர்களின் 'மகுட வைரங்கள்' என்னும் கவிதை நூலை பதிப்பிப்பதில் பெருமையடைகிறேன். அதிபராக கடமையாற்றும் கவிஞர் நித்திய ஜோதி, கவிதையுலகில் மகுடம் சூடியது மட்டுமன்றி கவிதை, சிறுகதைகள் பலவற்றை எழுதி பரிசில்களையும் பெற்றவராவார்.

முற்போக்கு எழுத்தாளர்களுள் ஒருவராக மதிக்கத்தக்க கவிஞர் நித்திய ஜோதியின் இக் கவிதை பிரசவங்கள் மனித நேயம் கொண்டவை, சமூக நோக்கு கொண்டவை, மலையக மக்களின் வாழ்வை புடம் போட்டுக் காட்டுபவை.

ஆசிரியர்கள், அதிபர்கள் என்போர், இலக்கிய துறையில் ஈடுபாடும், ஆர்வமும் கொள்வது குறைவாக உள்ள இக்காலக்கட்டத்தில், வேலை பளுக்களின் மத்தியிலும் இக்கவிஞர், மலையக மக்கள் வாழ்வின் அவலங்களையும் மற்றும் பண்பாட்டு கலாசார அம்சங்களை தீட்சண்யம் மிகுந்த கவிதைகளாக சிருஷ்டித்து தந்துள்ளமை போற்றத்தக்கது.

இந்நூலுள்ள கவிதைகள் தனித்துவம் வாய்நதவை. சாதாரண மக்களும் படித்து விளங்கத் தக்கவை, நவீனத்தும் மிளிந்து கவிதைகள் நடை போடுகின்றன. கவிதைகளின் உருவம், சொல்லாட்சி, உள்ளக்கம் என்பன ஏனைய கவிஞர்களின் கவிதைகளில் இருந்து இக்கவிஞரை வேறுபடுத்திக் காட்டுகிறது.

"இயற்கையை மறவுங்கள் மனித வாழ்வை பாடுங்கள்!" எனக் கோஷமிட்ட கவிஞர் பாரதியாரின் ஆதங்கத்திற்கு ஏற்றவாறு இந்நூலை கவிஞர் உருவாக்கி சிருஷ்டித்துள்ளார்.

கவிஞரின் கவிதைகளை உள்வாங்கும் போது கிறுகிறுக்கச் செய்த சில கவி வரிகளை அடையாளப் படுத்தலாம். "ஒளி படைத்த கண்களே".. என்ற கவிதையில் ஆசிரியர்களின் பெருமை புலப்படச் செய்யும் கவிஞர்.

"நீங்கள் தட்டிக் கொடுத்த பொழுதுகளில்
அடைந்த ஆர்வ அலைகள்தான்

வெளி நாடுகளில்
சுய கௌரவத்தை
அள்ளித் தெளித்தது"

என்ற வரிகள் ஆழமானவை.

மனித நேயத்தையும், தனி மனித உணர்வலைகள் துள்ளியமாக வெளிப்படுத்துவதைக் காணலாம்.

எடுத்துக்காட்டாக,

மஞ்சள் கோட்டில்
பண்டாரன்வலைவில்
பெறாமகன் நடந்தான்
ஆயிர ரூபாவில்
அழகான சிரிப்பு
அடுத்தவன் குறிவைத்தான்

போன்ற வரிகள் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும்.

தமிழ் கவிதை உணர்வுடையோருக்கும், தமிழிலக்கியத்தில் ஆர்வம் உள்ளோருக்கும், உயர்தர மாணவர்களும், கவிதை நூல்களை வெளியிட துடிப்பவர்களுக்கும் இந்நூல் ஓர் ஆதாரமாக அமைவது நிச்சயம். நூல் வெளிவர எல்லா வகையிலும் துணைநின்ற வல்ல நாயகன் அல்லாஹ்வை புகழ்ந்து நிறைவு செய்கிறேன்.

அன்புடன்,

ஜெ. பௌஸர்நியாஸ் (செயலாளர்)
தமிழ் இலக்கிய ஆய்வு மன்றம்,
இல:107/A, வெளிமடை வீதி,
அப்புத்தளை.
072 - 8278156



# கவிஞர் ராகத்தில்.....



கவிதை நேசனே!
கவிதை தோழியே!
உங்கள் கரங்களுக்கு
கவிதை மலர்களை தந்து
நுகரச் செய்கின்றேன்.


காதலை பேசும் போது ....
நீங்களே அங்கே
முத்திரை காட்டுவீர்கள்!
முகத்திரை விலக்கி தூது விடுவீர்கள்
கல்வியைப் பாடும் போது
நீங்களே ஏடு எடுக்கின்றீர்கள்.
எழுத்துக்களை கோர்த்து
முத்துச் சதங்கை கட்டுவீர்கள்
அரசியல் வாதத்தில்
எதிர் புறத்தில் அமர்ந்த நக்கீரர்கள்
நீங்களே!
காட்டிக்கொடுப்புகளை
கழுமரத்தில் ஏற்றுவீர்கள்.
சமூக விரிச்சலில்
நீங்களே சிவப்பு சட்டைக் காரர்.
சிலுவை சுமந்து உழைக்கும்
வர்க்கத்திற்கு உதவும் கரங்கள்.

ஊவாவில் இலக்கியம் மலர
நீங்களே!
வெளிச்ச வீடுகள்.
உங்கள் உள்ளத்தை
கவிதை தொட்டால்
நானல்ல
கவிதையே வெல்லும்!

என்றும் கவிதை மனதுடன்.
எ(உ)ன்
கவிஞர் நித்தியஜோதி.

# க(ா)லிங்க வீரனடி

தனமலர் பொய்கை
மார்பளவு நீரில்
தலைமகளை வீசினாள்
நீரில் காலடித்து மீண்டான்.
வெண்புரவி நீர் அருந்த
வேடிக்கைப் பார்த்தான்
கலிங்கத்து மாகோன்!



கோவில் குடியிருப்பில் அவன் கோட்டை
எழுவான் கரையும், படுவான்கரையும்....
எத்தனை பற்றுகள். எல்லாம் அவன் ஆணை.

மீண்டும் பாலகனை
வானத்தில் தூக்கியெறிந்தாள்!
ஆழத்தில் விழுந்து
அலற முடியாமல் மூழ்கினான்
விரிந்தக் கூந்தல் உடுத்தச்சீலை
பரவிக்கிடக்க
நீரில் பாய்ந்தாள் மகனை கரைச் சேர்த்தாள்.

வேந்தன் "நல்ல பயிற்சி என்றான்!"
"அதுவே நல்லக் கல்வி என்றான்!"
தங்க மாலையை குழந்தைக்கு கொடுத்தான்!
அவள் .... தனமலர் ஒன்றை
பூஜைக்கு கொடுத்தாள்.
"தங்கத் தலைவனுக்கு தனமலரா?"
தனமலர் வளவு உனக்கு என்றான்.
ஆ.... ! காலிங்க ரஜதுமா?
அன்று பாலகன் காலிங்க ஆனான்!



ஓலைகளில் தெரிந்த தெளிந்த உரை
தங்கேஸ்வரி நாச்சியார் சொல்லச்சொல்ல...!
ஆளி எல்லை தர்சினி
ஆற்று நீரில் அடித்து செல்லும்
வளாகத்து வாலிபனை நினைவில் கொண்டாள்!

மகுட வைரங்கள்

# யாழ் இனிது!

நீல கருவிழியில்
சிரிக்கும் போது!
கால்களில் முத்தமிடுவேன்!
கைகளை ஆட்டி
பேசத் துடிக்கையில்
வார்த்தை
கேட்கத் துடிப்பேன்!
தத்தி நடந்து
விழுகின்ற போது
தாவி உன்னை அணைப்பேன்
சுட்டு விரலால்
காட்டும் பொருளை
கொணர்ந்து கையில் கொடுப்பேன்
மலரும் நீயும் சமமெனக் கூறி
மனதில் வாசம் சுமப்பேன்!
புலரும் பொழுதில் விழிக்கும்
புதல்வி பூ விழி
பாசம் ரசிப்பேன்!



!

# கண்ணுச்சாமி .. மகாராசாவுக்கு பராக்! பராக்

வேந்தனே!
உன்னைக் காட்டிக் கொடுத்தார்களோ?
கதிர்காம வேதியருக்கு
காணிக்கிடைக்க
விதி வரைந்தவனே!
பாத்திமா போற்றிய இஸ்லாத்து
பாமரர்களுக்கு
பங்கரகமை தந்தவனே!
ஊவாவின் மாநதியை
ஒரே வீச்சில் கடக்க
போகொட பாலம் தந்தவனே!
ஏறாவூர் யானைகளை
புத்தர் தேர் இழுக்க
வரவழைத்தவனே!



உன்னையா
இடையன் காட்டிக் கொடுத்தான்?
நூற்று முப்பது மூன்று வருஷங்கள்
அடிமை வாழ்வுக்கு
முடிச்சுப் போட்டானோ!
உனக்கு
வேலூர் சிறை
சாலையிலிருந்து.
சிங்கம் போல் கர்ச்சிக்கும் ராஜனே
முதற் போரிலே
வெள்ளையன் முதுகை வலைத்தவனே!
கண்ணுச்சாமி என்னும்
பொன்முகம் மறையுமா கண்ணில்?
ஒப்பந்தம் உன்னை மட்டுமல்ல
தோட்டங்களையும்.
தொழிலாளியையும்
ஏமாற்றி விட்டது!!

# 'கவரிமான்களும்..........
# கோவேறு கழுதைகளும்.......'

ல(ா)யத்தில்
வளரும், கவரிமான்களுக்கும்
கோவேறு கழுதைகளால்
அவமானம்!

நூற்றாண்டுக்கு ... முன் ...
புரவிகளாய், புரட்சியில் குதித்தவர்கள்
இன்றோ, புற்றில்லா புடையன்களாகி
இனத்தையே, குறி வைக்கின்றனர்.

லயத்துச் சேரியை, உற்றுப்பாருங்கள்
குறிஞ்யென்னும். அலங்காரத் திறைக்கும்
அடங்கி கிடக்கும் அவலங்கள்,
அசிங்கங்கள் இவை சிங்கங்களுக்குத் தான்
தெரிவதில்லை! மனிதர்களுக்குமா தெரியவில்லை?
ஓ .... உங்கள் மூக்குக் கண்ணாடியை
கழற்றி எறியுங்கள்!

மூக்கு மூளைக்கு
உண்மையை உணர்த்தட்டும்

கானு ஓரமோ கழிவறைகள்,
கோடி பக்கமோ பொதுப் பூங்கா
குப்பை மேடுகளோ மைதானம்!
மரங்களின் மடியிலே
காதல் விளையும், மடி சுரக்கும்
கோவில் நிதியில் கமிட்டிகள்
காலமெல்லாம் டிமிக்கிவிடும்!

சிமிட்டும் விளக்கொளியில்
விடை தேடும் இளையோர்
மனத்தில் தன்னம்பிக்கை ....
முயற்சி ......, வெற்றி......., திறமை
இவற்றின் வரவுக்காய்
கிழிச்சல் சாக்கில் துயிலாது
புரள்கிறாள மலைமாது!

# முன்னேற மாட்டியா?



அம்மன்
கோவில் முற்றம்
மார்ஷல்
சந்தனம் தாவென
கேட்க!
குங்குமமாய் அவள்
முகம் சிவந்தது
பத்து வயது
வித்தியாசத்தில் ஒரு
காதல்...

மாவிளக்கு கேட்டான்
அம்மா புரிந்து கொண்டே!
வீட்டுக்கு வாங்க தம்பி
என்றாள்!

விரிந்து அகலபாய்ந்த (அலை)
கூந்தலை இழுத்து
பிரமித்துப் போனான்!
ஈர கைகளை
கழுவும்போது
விரலைத் தொட்டான்

ஊர் நாக்கில்
ஊருக்காய் தடவிக்கொண்டது!
அவள் முழுகவில்லை என்றது!
கச்சேரி வாசல் கண்டதாக
பேசிக் கொண்டது!

ஆயிரம் பேர் வரை
ஆயிரம் பொய்ச் சொல்லி!
ஆனந்தப்பட்டார்கள்!
ஒரு தடுப்புக் கோட்டுக்குள்
அவளுங்கள்! மைதிகள்

கவிஞர் நித்திஜோதி

இருபது வருடங்களின்பின்
அந்தஸ்துடன் அவன்
அவளுக்கு ~~மட்டுமன்றி~~
அழகான குடும்பம்
வாழ கற்றுக்கொண்டது

ஊரை பார்க்கிறேன்
அது..
பாகக்காய் தின்று
செல்போன் பேசும்..
யுவதிகளையும், பைக்கில்
செல்லும் பொடியன்களையும்
திட்டிக்கொண்டு இருக்கிறது!
நூறு வருஷம்
பின்னே நிற்கும்
ஊரே!
முன்னே எப்போது
நடக்கப் போகிறாய்!

# பாசவலை வீசுங்கள்...


உலக மாதா
மாங்காய் தீவின்
அழுகை போக்கினாள்!

நீயே! மழலை
பதுளைத் தாய்
போஷிக்கின்றாள்!

கண்தெரியா... ஓவியன்
கல்லில் கண்ட காவியம்..
அங்க சாத்திரத்தில்
அவளே!
ஈரானிய பெண்மணி!

மீரா நாயர் படிக்காத சூத்திரம்...
ராதாமணாளன் எழுதாத
கொழுந்து மொழி!

இவர்கள் இருவருமே!
உலகத்தை கட்டிப் போட்டு
விட்டார்கள்.
காதல் விழி ஒருபுறம்.
கனிவு மொழி மறுபுறம்!
பைத்தியமா உங்களுக்கு?
பாசவலை போதுமடி!



கவிஞர் நித்திஜோதி

## 'காதல் சொன்ன கண்ணாளன்!'



அந்த
கறுப்பு நிலாவை
கூந்தல் மேகத்தால்
மூடிப்பார்க்க
எனக்குள்
பொங்கும் ஆசைக்கு
பெயரென்னவோ...?

முன்னே..
கிடக்கும்
கேள்விக்கணைகளை
கண்ணால் பார்த்து
தீர்வுகளை
செயலில் காட்டும்
தனித்திறமை
என் காதலுக்கு
கிடைத்த முதல் மரியாதை!

அழகான காதலிக்காய்
அலைந்து திரியும்
வாலிபச் செருக்கு
தெரு நாயின் பாஷை

சிங்கார சிரிப்புகள்
நாகரீகம் மூட்டத்தினுள்ளே
முகம் கழுவும் நாளில்
வெட்கத்திற்கு மட்டும்
மரியாதை தந்தவனே!
உந்தன் வேள்வியால்
நானே
மனைவியாகிறேன் மன ஊஞ்சலில்.....

# தியாகம் செய்..!

ஒரு கோடி மக்கள்
கூடிய சபையில்
நானே முதல்வன் என்றேன்!
குருவுக்கு இடம் கொடுத்து
விலகின முகில்கள்.....!

ஒரு இலட்ச ஆசிரியர்கள்
திரண்ட சபையில்
பேச முன் சென்றேன்
தரம் பெற்ற தகைமை
கையெழுத்தோடு..
இலட்சனை பெற்றுக்கொடுத்தது!

ஓராயிரம் அதிபர்கள்
நின்ற முற்றத்தில்
பாமலொன்று பாடச் சென்றேன்
கவிஞன் என்பதால்
காலம் கைகொடுத்தது

நூறு கவிஞர் சங்கத்தில்
ஏற நான் சென்றேன்
கூறும் தியாகம் செய்தபின்
அறம் வென்றதங்கே!

பத்து தியாகிகள்
மத்தியில் நான் சென்று
மனிதன் வாழ
கண்தானம் தருபவன்
என்றேன்!
காணிகொடுத்தவன், காசுகொடுத்தவன்,
சேண கொடுத்தவன், சேவைசெய்தவன்,
எல்லோரும் மறைந்து போனார்களடி!

# 20 தலைக்கனம் உள்ள மனிதன்

நல்ல காலைப் பொழுதில்
நான் நடந்தேன்..
பொய்யை வாயில் புதைத்திருந்தவன்
கள்ளச்சிரிப்போடு...
குட் மோனிங் என்றான்..
நேற்று அவன் பேசிய
தூசனங்கள்! செவியில்
அங்கு உறுத்தலாய் வலித்தது!
காதில் பஞ்சு வைக்கச் சொன்னது!
பதில் சொல்லாமல் நடந்தேன்!

விடியலைத் தேடிய
புத்தாண்டில்...
கைபாகு கொடுக்க
கைகள் நீண்டன...
கள்ளத்தனத்தில் காசு சேர்த்து
அடுத்தவன் ஒப்பத்தை
ஆவணத்தில் போட்ட
கரைகளை கண்டதும்
கை நடுங்கியது..
அடுத்தவன் மனைவிக்கு
கைகொடுப்பதை எனது
மனைவி பார்த்து
சாபமிடுவாள்!
பலகை மேடையில்
பாட்டொலிக் கேட்டது
நீண்டு காத்திருந்த
நிழலைத் தொட்டு



கும்பிட சொன்னார்கள்!
அசலைப் பார்த்து
அகம் துடித்தது
சாராய வாடை!
சல்லாப பாவாடை!
ஆராய அறிவில்லை
தியாகம் எவையுமில்லை
யாவார பேச்சுக்கு
கொங்கிரட்டு மட்டும்..

ஐயர் வந்து ...
காலாஞ்சி கொடுத்தார்!
சங்கரர் வந்தால் அத்வைதம் சொல்லியும்,
பாரதி பார்த்தால்
பூ நூல் அறுப்பார்!
வெற்றிலை சப்பி
துப்பிய உதடுகளுடன்..
நூலகம் நோக்கி
நடந்தன கால்கள்.
நல்ல கிறிஸ்தவ
போதனை தெரிந்த
சொல்லுக்கும் செயலுக்கும்
அர்த்தம் தெரிந்த
சாபாரஞ்சன் பணிகள்!
பீடங்கள் சென்று-பௌத்த
பீடாதிபதிகளின்
ஆசிகளை தேடிவரும்
பிரமதாஸ பக்தி...
ஐந்து நேர தொழுகை
அல்லல் நபியின்

மார்க்கத்திலிருந்து செயலாற்றும்
தாஜுதீன்... கடமை
புத்தக வெளியீடு...
புதுமை கலை விருந்து
தந்தருளும் சிந்தனை!
மதிவெனின்வானன்..
இவர்களோடு இருந்து நீதி தேடியவனை
தலைவணங்கு என்றால்
தலை ஆட்டுவேனோ? ..
புகைக்காமலே புகை வருகிறது
வாயில்...
அதோ.. தலைக்கன மனிதனென
கட்சி தொண்டன் கத்தவது
கேட்கிறது!
மக்கள் திலகம் போல்
மாமனிதரைத் தேடி
கிழக்கு திசை நோக்கி
சொந்த பணத்தை குலமாந்தர்
வாழத் தரும் நடைபயிலும் கால்கள்!
அறப்பணியில்
தொடுத்தான்!

# ஐந்தாவது காதல்

என்னய்யா... மகாராசன்..
இப்ப நீங்க
கண்ணைக் கசக்கலாமா?
வேப்ப மரத்தடியில் - நின்ற
வேலம்மா தான் கேட்டாள்!

பேனா புடிச்சவரு
பேரு போடும் சின்னவரு!
சொல்ல வார்த்தையின்றி
செருமி நின்றார் வார்த்தையின்றி!

பின்னே.. இருக்காதா!
மட்டக் காட்டுக்குள்ள
மடப்பய மகன் வந்து
கழட்டுவேன் காற்சட்டை
கவனமே சொல்லியபின்...
பேரு போட முடியுமா?
பெரெட்டு கலைக்க முடியுமா?
ஆயுள் முடியும்வரை
அவமானம் தான் தீருமாமோ?

தோட்ட துரைக்கிட்ட
கேட்டு வாங்கனும்
தோட்டம் விட்டு
போகும் கடிதம்!

ஐயோ.. வேணாங்க..
அடிமனசு கேட்குதில்ல

சன்டாளன் மகனை-நான்
கட்டிக்கிட்டு வாழவில்லை!
கொடுத்த
சாராயம் செஞ்ச வேலை
இந்த தோட்டம் ராசி
எப்பவும் உங்களுக்கு!

# என் மன வேதனை.....!

பனிவிழும் மார்கழியில்
சைபிரஸ் மரத்தில்
இதயம் வரைந்து
எம் பெயரை எழுதினாய்!

எனக்குள்
அடைக்கோழியாய் கிடந்த
ஆசைகள்
ஒரு நீடித்த இரவில்.. கொக்கரித்து
கிளர்ந்து இன்ப பயணம் போனது!

உனது கறுப்பு கண்ணாடியை
எனக்கு தந்து ஊரை ஏமாற்றப்
போதனை செய்தாய்!
மழைக் கோட்டுக்குள்
நுழைந்த எனக்கு
உலகத்தை பேய் காட்டியதாக
தப்புக்கணக்கு போட வைத்தாய்!
சைபிரஸ் இலைகள்
பனித்துளிகளை வடிக்கட்டிக் கொண்டன!
உன் கைகள் பிணமாய்
சில்லிட்டன.
நான் தாதி என்பதால்
பொறுத்துக் கொண்டேன்!

ஒரு வருடம்
ஒளித்து விளையாடிய பின்



(26)

சைபிரஸ் போவதாக
கூறினாய்!
என் பதில் உனக்கு
தேவைப்படவில்லை!

சைமரத்தடியில்
கிறிஸ்து பிறப்புக்கு
போன போது!
இதயத்தில் ரணங்கள்!
பெயர்களில் பாசி பூத்திருந்தது

பேய்மழை கொட்டுகிறது
சைப்பிரஸ் இலைகள்
நிமிர முடியாமல்
ஈரமாய் நீர் சொட்டுகின்றன
ஈர விழிகளுடன் நடக்கிறேன்
சைபிரஸ் உதிர்ந்த இலைகள்
சருகுகளால் மிதிப்படுகின்றன
என் இதயம் போல!

# நிஜக் காதல் வெல்க..

மனசும் மனசும்
மோதிட...
மின்னல் வெட்டி
வெளிச்சம் போடும்!
ஊர் வேடிக்கைப் பார்க்கும்!

கண்கள் சிமிட்டி
கனவு சுமக்கும்...
மனங்கள்
ஏழு ஜென்ம பந்தம் பேசி
இன்பத்தை தெளிக்கும்!

புனித காதலுக்கு
கல்லறை கட்டி
சுய நல தீர்ப்புகள்
எழுத உறவுகள் காத்திருக்கும்!

கடவுள் நல்லவர் - உன்னை
பிரமா படைக்கும் போதே
நல்லவனிடம் சேர்த்து வைக்க
விதி எழுதி விட்டார்!



28

# இதோ! உனக்காக...

நீ! என்னை
நல்லவன் என தெரிந்து
புன்னகை பரிசளிக்கும்வரை...

குங்கும வெட்கமும்,
குனிந்த தலை நாணமும்,
செல்லக் கோபமும்
குவிந்த அதரமும்...
கண்டும் நான்
அனுமதி கேட்கிறேன்.

ஓதி விடு தோழி
ஒரு வார்த்தை..
இவ் வேளை நானோர்
அந்தணன்..
வேதம் கேட்க தவம்
இருக்கிறேன்..
ஸ்ருதி கூறு
நானே நீ என்று!



# Love of Green Leaf

மரகத பச்சைத் தீவில்
மல்லிகா நின்று
மட்டக் கொழுந்தெடுத்து
மடிச்சு வெத்தலை
போடும் போது
மச்சானின் நெனப்பு!
மார்பினிலே கனத்தது!!

அந்தி நேரம்
அல்லிமலர் தோப்புக்குள்ள
தூவானப் பீலியில்...
மாராப்பை விழுக்கினப்ப
பூவரசு மரத்திலிருந்து
பார்த்தவகளல்லோ!

முச்சந்தி பாடையில
முத்துப் பேச்சி போனநேரம்
முழுக்கெடுத்த காலத்தில
எச்சில் பேய் வந்து
என்னைப்புடுச்சி வாட்டையில
பூசாரி கூட்டி வந்த
புன்னியவான் நீங்க இல்ல..!



30

பச்சைக் குடிசைக்குள்
பத்திரமாய் நானிருக்க
பச்சை பாம்படிக்க
வந்தவுக நீங்கலல்லோ!
முக்காடு இல்லாம...
முகம் பார்த்த உங்களுக்கு
முனிதோஷம் வந்திருச்சா?
முத்தழகா சொல்லு மச்சான்!

எப்ப வருவீக.. ஏங்குது எம்மனசு?
அடக்க முடியவில்லை அவசரப்படும்
பருவக் குருத்துக்களை!
செத்த வீட்டுக்கு
சவம் எடுக்கும் நேரம் வர...
செவரு விழகாம சாஞ்சி நின்னா
போதுமா ஐயா!
சித்திரைக்கு சமைஞ்சத
வெளங்காம கேட்கிறேன்
எட்ட நின்னு பார்த்தா
என்னாகும் என் காதல்
வைகாசி வந்திருச்சி
பரிசம் போட நீங்க வாங்க!

# நிச்சயமாகவே ஆசீர்வதிக்கவே

பனி விழுந்த வீதியில்
ஜோர்டான் எல்லையிலிருந்து
பார்க்கின்றேன்...
ஒட்டகங்கள் உலாவுகின்றன!
பேரிச்சமரங்கள்
பனை மரங்களாகத் தெரிகின்றன...
சிலுவை யேசுவின்
சமாதி ... யூதர்களால்
காவல் காக்கப்படுகிறது!
பாதாளக் குழிக்குள்
பாவத்தை எழுதி போடச் சொன்னார்கள்!
'தொண்டுகளும், சேவைகளும்,
அர்ப்பணிப்பு செய்து துன்பத்தை மட்டும்
மிச்சமாய் சேமித்த
ஆசிரியர்களை காப்பாற்று'
என எழுது போட்டு
நிம்மதி பெருமூச்சு
விட்டான்!
பதுளை கவிஞன்...

## 32

# Picture of the Teachers

ஒளிப்படைத்த கண்களே!
நீங்கள்
புத்தகச் சுமைகளை
சுமந்து பார்க்கச்
செய்தீர்கள்
எமது வாழ்க்கையில்
உயர்ச்சிப் படிகள்
அவையென
தெரிந்து கொள்ள
காலங்கள் தேவைப்பட்டன

நீங்கள்
உள்ளங்கையில்
அறைந்த
பிரம்பு வீச்சுகளே
எங்கள்
எண்ண ரேகைகளை
சந்திர மேட்டுக்கு
கொண்டு சென்றன.
இன்று
புவியின் காலச் சூழலை
கணக்கெடுக்க வைக்கின்றன.



நீங்கள்
தட்டிக்கொடுத்த பொழுதுகளில்

அடைந்த ஆர்வ அலைகள்தான்
வெளி நாடுகளில்
சுய கௌரவத்தை
அள்ளித்தெளித்தது

உலகம்
சுழல மறக்கும்
நாளில் கூட
படிப்பித்த ஆசான்கள்
கண்ணில் மணிக்குள்
கனவாக
வலம் வருவார்கள்.
நன்றி!
சுடர்மதி 2008
கல்வி அமைச்சு

# பாலைவனத்து ரோஜா

உம்மா...
சொன்னவ...
வெளிநாட்டுக்கு போனதுகளில்
தமக்கு
இஷ்டமில்லை என்று
தயங்கி
மாட்டு வண்டி மாதிரி இழுத்தான்
அறபாத்...
காதலி முகம் பார்க்காமலே!

மூன்று வருஷம்
சவூதியில்
உழைத்து
ஊடு கட்டி, நகை நட்டு சேர்த்து
கையில மூன்று லகரம் ! பத்து
பவுன்ல கொடுக்கிறம்...
ஜெரினா பீபி
தரகரிடம் சொல்லும் போது
தரகர் அலி
இரண்டாம் தாரமென்றால்
சொல்லுங்க சரிப்படுது என்றான்.

யா.. அல்லாஹ்
அவ

எயார் அரபில் ஏறினாள்!
நம்ம நாடு நல்லதுதான்
நம்ம நடைகள் தான்
பின்னுகின்றன
ஆறாயிரம் அடியில் பறக்கும் போது
நினைத்துக் கொண்டாள்.

பிலிபைன்ஸ் காரன்
கண்களிலே கேட்டான்
நிக்கசரிப்பட்டு வரல்லயா!
இங்க உள்ள ஆம்புளகளவிட
வெள்ளையா திடகாத்திரமா
இன்னும் மூன்று வருஷம்
இருக்கப் போவதாக கூறினாள்!

சாப்பாட்டை அனுப்பும் போது
ஜெருலேமுக்கு போறப்ப
நானும் வருறன் என்றாள்!
அவன் நெற்றியிலிருந்து
சிலுவை வரைந்தான் ஆமேன்!

# வெள்ளிவிழா

ஜஸ்மின் வாசலில்
ஜேசுதாஸன் வந்தபோது
பத்து வயது வித்தியாசத்தில்
காதல் பார்வை கவிதைகள்!

என் கையிலிருந்த
சந்தனத்தை
நெற்றியில் தொட்டுவைத்து
மாமி காலில் விழுவோமா!
எனக் கேட்டார்1
அப்பாவுக்கும் விளங்கியபோது
வீட்டுக்கு தம்பி என்றார்!

எனக்கு பதினைந்தாக இருந்தபோது
அவருக்கு இருபத்து நான்கு!
நீர்! சின்னப் பொண்ணு என்று
மேகமாய் விரிந்த கூந்தலை
இழுத்து ஊதி விளையாடுவான்
பதிலுக்கு கிள்ள வைக்கக்கூட
எனக்கு தெரியவில்லை!
விரலை மட்டும் பல்லில் கடித்து
தலை குனிவேன்!

ஊருக்கு ஊருக்காய்
நாக்கில் பட்ட சந்தோஷம்!
தந்தத்தை உடைக்காமலே
திரௌபதியை எழுதியது!
வீரசோழியம் தெரியாமல்
கந்தப்புராணம் கூறியது!

நான் மருந்து எடுக்க
போனதாக...
அவரை கச்சேரி சந்தியில்

கண்டதாக
ஆயிரம் பேர் ஒரே நேரத்தில்
எந்திரனாக வந்தார்கள்!
எந்தன் காதல் பட்டத்தின்
இழை அறுந்தது!
இருவத்தைந்து வருஷம் கழித்து
அந்தஸ்துடன் இருக்க
அவர்மகன் என்மகளை தங்கச்சி
என்றான்
எனக்கும் கௌரவமாக குடும்பம்
சமூகத்தைப் பார்க்கிறோம்
அது வழமைபோல

கையடக்கத்தில் நேரம் கழிக்கும்
இளைஞர்களை!
வெள்ளை சட்டைக்கும்
நீல காற்சட்டைக்கும்
இடையில் நாகரீகம் கொண்டுவந்த
யுவதிகளைப் பார்த்தும்
ஏதேதோ புலம்புகிறது!

நாங்கள் வளர்ந்து விட்டோம்
இது! எங்க ஊர்
அப்படியே சோமாலியாவின்
குழந்தை மாதிரி!

# வேதங்களின் சுருதி

சுருதிக்கு....
மாப்பிள்ளை வருவதாக
இருபத்து மூன்றில்
அம்மா செல்லம் காட்டினாள்
குளித்து 'பட்டைச்சுத்தி'
மல்லிகையில் நின்றாள்! வந்தாள்
படிதாண்டும் போதே!
மொட்டையாய் இருந்தான்
வயிறு தொப்பை
கர்பமாக வில்லை எனக் கூற

பட்டியை இருக்கி இருந்தான்.!
நாற்பது வரை என்ன செய்திருப்பான்
அண்ணா! காப்பாற்று என்றாள்.

இருபத்தைந்தில்
மாலை நான்கு மணிக்கு
சுடிதார்- குதிகால் செருப்பு!
தேநீர் கொடுக்கும் போது
தேயிலை விலை ஏற்றம்
பலகாரம் கடிக்கும் போது
மருந்து வியாபாரம்
மணிச் செய்தியில் கூட
பங்குசந்தை பற்றி கேட்டான்
வேண்டாம் அப்பா
இரவு பத்துமணிக்கு வந்து
காலை நாலுமணிக்கு போகும்
ஐந்து மணித்தியால புருஷன்
வேண்டாம் என்றாள்!
அப்பாவுக்கு அன்புடையதாகியது!

புரோக்கர் புண்ணியமூர்த்தி
கடையாக்கி மாஸ்டரை
கூட்டி வந்தான் மரியாதை
காட்டினான்!குருசங்க,
ஈடிசியஸ்,வங்கி கடன் பற்றி
தெளிவாக தெரிந்திருந்தான்!
மாசத்தில் ஒருதரம் பீர்மட்டும்
குடிப்பதாகவும் சொல்ல அவள்
வெள்ளைசட்டை, நீல டெனிமில்
இருக்கும் போது
அவள் ஐயப்பன் பற்றி பேசினான்!

அவள் பத்தாம் திகதி பிளென்டியும்
பதினெட்டாம் திகதி கைமாத்தும்
வாங்குவாண்டி!
நோட்டை கிலியராக்கத் துடிக்கும்
தங்கையிடம் கூறினாள்
அவளும் மறுக்கவா முடியும்?

சரி- பதிநாலாம் திகதியும்
வந்திருச்சு!
என்னடி பண்ணப்போற?
தோழி.. கேட்டாள்!
இப்ப பாரேண்டி
மெண்டிஸ் மெடிக்கல் ரெப்
வண்டி ஓட்ட
பின் சீட்டில் மேடம் மாதிரி
ஏய்! அவள்
வேதக்காரன்டி! சந்தியா கத்தினாள்
நான் `சுருதி வேதம்`
உனக்கும் தெரியாதா?

# மாப்பிள்ளை கவனம்

உடையார் மகனுக்கு
மாட்டிறைச்சி என்றால் பிரியம்
ஊருக்கு தெரியாம
ஹாஜியார் கடையில
ஒளிஞ்சி தின்னும் போது
மூலையில்

சோழியனும் மொட்டையனும்
கொத்து தின்னு
சாயம் குடித்தார்கள்.
திங்கள் மாலை
சாப்பு சட்டம்
'பில்கேட்டில்' அந்திக்கு
பதிந்தார்கள்!

பகலில்
தேவேந்திரனும்,
பலகல பாலனும்
குறுகிய நேரத்தில் திரும்பினார்கள்!
பத்துமணிக்கு..
வெள்ளிக்கம்பியை பிடித்து
மேலே ஏறினார்கள்!
அவர்களின் ஏற்றத்தை
தர்மகர்த்தாவோ, ஐயரோ!
அபச்சாரம் சொல்லி
தடுக்க முடியாது!

சீனக் குட்டிகள், ரஷ்ய குட்டிகள்
பிலிப்பைன்ஸ் பையன்கள்
பன்றி இறைச்சி சாப்பிட்டு
வழு, வழுவென இருந்தார்கள்!

# இராஜசிங்கன் தமிழ்
# இராஜமுத்திரை


எல்லாளன் நெறியில்
இலங்கை ஆண்டவனே!
வேலூர் சிறை வாசம் உனக்கு!
லயத்துச் சிறை எமக்கு!

ஆடிமாதம்.. வேடத்தில்....
வீர பாண்டியன்,
சோழன்
மதுரை வீரன்...
திரை விழுந்தது!

மீண்டும் அல்லி முத்துகள், சாமிவேலுகள்,
கன்னையா, பழனிவேலு, சாமி.....
உங்களை
மேடை தேடுகிறது!..



# சமாதான நகர்



புனித நகர்
மனித நேயம்
விதைக்கிறது.
அமெரிக்க யூதர்கள்,
ஈராக் இஸ்லாமியர்,
வத்திக்கான் கிறிஸ்தவர்கள்,
பதுளை இந்துக்களும்
ஒரே நேரத்தில்...
வலம் வந்தார்கள்.
பக்திக்கு மொழி இல்லை!

## கண்டிச் சிங்கம்....

இராசிங்கனுக்கு பிறகு
மலையகத்தை
உயர்த்தி பிடித்தவனே!
வீரம் குலத்தில் விளை நிலம்!
வியூகம் போரின் செய்நெறி!!

இங்கிலாந்து காரனை
கண்டியில்
தோல்வியடைய செய்து
சுதந்திர பிரகடனத்துக்கு
தோரணம் கட்டியவன் - நீ!
அயோத்தி படைகளை
கெத்தாராமையில்
துரத்தி அடித்தவன் நீ!
மட்டையால் சிக்சர் அடித்தவன் நீ!

இராவணன் சீதை ஏமாற்றம்
யுத்தக் காண்டம் ஆகியது
சீதையை கீதமாக்கி சொந்தமாக்கினாய்!
சென்னை தத்து எடுத்தது கோடிக்கு!
கந்துரட்டைக்கு துணை கதாநாயகன்
சென்னைக்கோ சுப்பர் கிங்ஸின்
மகுடத்தின் முத்து நீ!
இருபது வருடம் உலக தமிழுக்கு
இருப்பைக் காட்டியவன் - நீ!
ஓய்வு ஈடில்லா இழப்பு!
இங்கோர் 'மலைய கிங்காகப்'
பயிற்சி கல்லூரியில்
புதிய வீரர்களை உருவாக்கு!
வடக்கிலும், கிழக்கிலும் சுழல் பந்துவீச்சு
அறிமுகப் படுத்து!
ஓய்வு - அறுபதில் வருவது!
இன்னும் இருவது வருடங்கள்
விளையாடு! விளையாடு!
வீரனாகவே ! போராடு!



யாழ் காரை சுந்தரம்பிள்ளை
கல்முனை பூபால்
பதுளை தமிழோவியன்
நித்திய ஜோதியின் கவிதைகளை
நெறியாண்ட கனவான்கள்.

# ஓ எந்திரா!

இணையமே!
என் தோழா!
உன்
சேமிப்பு பழக்கம்
வியக்க வைக்கிறது!

புரட்சிக்கலையை
வலைப்பின்னி வந்தவனே!
உலக கவிதைகளை
நாம் காணத்தந்தவனே!

Yahoo என துயிலெழுப்பி
Coogle என பூ பாலம் பாடுகிறாய்.
உள்ளே!
கோடி நூல்களின் வரிசை.

பல்கலைகழக கல்வியை
மேசையின் முன்னே கொண்டுவந்தவனே!
பலரச இலக்கிய கவிதைகள்
படிக்கத் தந்தவனே!
பத்திரிகை, படங்கள், பாட்டுகள்,
ருசிக்கத் தந்தவனே!
உண்மை நண்பனே நீ என
புரிந்து கொண்டேனடா!
இலக்கியங்கள் உதிக்கும்
உலகம் வலம்வரத்தான்
உன்னைப் போல ஒருவன்
உருவாகப் போவதில்லை



# நீ ......... என்றும் நான் .......

நீ .......
சிரித்தாய்
என் இதயம் சரிந்தது
புரிந்து கொண்டும்
பதிலைத் தேடுகிறாய்
நானோ .... வினாவைத் தேடுகிறேன்

விண்ணில் தாரகைகளை
எண்ணிப்பார்க்கின்றேன்
ஒரு வெள்ளி
எரிந்து விழுவது போல
எனது காதல்
உனது உதட்டில்
உச்சரிக்கப்படுமா என்று
சமூகம்
எச்சில் துப்பி என்னை
ஏசிவிடலாம்
எச்சில் சுவையால் எவரஸ்ட் சிகரம்
நானடைந்த பின்
எனக்கெதற்கு வெட்கம்.

ரோஜாவை! நீட்டினேன்
முள் குத்திய காயம்
ஆறுமுன்னே வேதனைதனை
விலை பேசி வாங்குகின்றேன்
உனது பெறுமதி
அதை விட பெரிது என்பதால்
புன்னகையின்
புதுமலரே! பூ மியின்
உன் உயிராவேன்
எண்ணுகின்றேன்
என வாழ்க்கை
எண்ணமெல்லாம்
உந்தன் கையில்

# ஏய் ....... பௌர்னமி



உன்னைக் கேட்காமலே
இதயத்தை
பறித்தெடுத்த குற்றவாளியை
கைதியாக்கி சிறை வைக்க
கேட்டேன்
நீயோ .... இப்போதே!
கருணை மன்னிப்பு தருவதாக
அவசரப்படுகிறாய்!

இப்போது ....
அப்புத்தளை கூதல் கூட
குளிரவில்லை
உனது நெருப்பு கண்கள்
என்னை சுட்டப்பிறகு!

நீ! நோன்பை
கலைந்து விடு
நோவும் நெஞ்சுக்கு
இதமாய் சேதி சொல்லு!
பௌர்ணமியா.........
இதயம் எரிய வைத்தாய்

எழு பிறவி சாபம் தந்தாய்!
ஊதி அணைத்து விடு
ஊதும் இதழால் அணைத்து விடு
வாழ்ந்த பின்பு வீழ்வு
வீழ்ந்த பின்பு வாழ்வு
எல்லாம்
முகத்திரை விலக்கி
முடிவு வெல்ல வேண்டும்!

உன்னை
தாஜ்மகால் கட்டி


காத்திருக்க நான்
சாம்ராஜியம் வைத்திருக்கவில்லை!
நொடிக்கு நூறு தரம்
அடித்துக் வெல்லும்
இதயம் மட்டுமே என்னிடமுள்ளது!

ஆசையை மட்டும்
கட்டிப்போட்டு
கண்ணீர் துளிக்குள்
நின் உருவம் இருப்பதால்
துடைக்கவில்லை!
முடியுமானால் கைக்கொடு........
முடியாவிட்டால்
முதல் குழந்தைக்கு
எனது பெயரை
எடுத்துச் செல்......
முகவுரையும்
முடிவுரையும்
வரையக் கூடிய
சித்திர ஆசிரியை
நீயே!

ஓ! பௌர்ணமியா
புகைவண்டிக்கூட
பச்சை விளக்கை
எதிர்பார்க்கிறது !
~~நானோ~~
பச்சை சல்வாரில்
உன்னை ............ !
இரண்டும் வருமே
இருக்கையில்...!

# தாஜ்மகால்

காதலுக்கு மட்டுமா
உயிர் கொடுத்தாய்!
கட்டிடக் கலைக்கும்
அற்புதம் அரங்கமே அளித்தாய்!



பளிங்கு கற்களை பிளந்து
ஒட்டி வைத்து
ஆயிர வருடங்கள்
ஒளிர வைத்தவனே!
எங்கே கற்றாய்
நிர்மாணக்கலையை!

உனக்கல்லவா !
நோபல் பரிசு கொடுத்திருக்க
வேண்டும்.

உயிர்விட்டவளுக்கு
உயிருள்ள கல்லறை தந்தவனே
உனக்கு பெறும் கட்டாந்தரையா?
துரோணர் ஏகலைவன்
கட்டைவிரலை துண்டித்ததுபோல்
அராஜக ஆட்சி
கரத்தை துண்டித்து
கலையைச் சவப் பெட்டிக்குள்
அடக்கம் செய்ததோ?
தலை வணங்குகிறது உலகம்
நிலை தளர்ந்த அரசு கவிழ்ந்து!

கவிஞர் நித்திஜோதி

மக்கள் ஆட்சி மண்ணில் பூக்க
உந்தன் கதறலும் தான் காரணமா?
உன் மனைவி தான் எறிந்த மண்
சாபத்தை கண்டு
ஒளிந்துக் கொண்டதா
அக்கிரம ஆக்ரா அரசு!


கலைஞனே!
கட்டடங்களின் சிற்பியே!
லங்காபுரியிலிருந்து கவிஞன்
உன்னை அடையாளப்படுத்தினான்.

தாஜுதீன் என அழைக்கின்றான்.
இன்று வரை முணங்கி கொண்டிருக்கும்
ஆத்மா... அது கேட்டு...
மீண்டும் பிறக்கட்டும்
தாஜ் மகாலுக்கு முன் கைஏந்தி
தாஜுதீனை வாழ்த்துங்கள்
காதலர்களே நீங்கள்
வாழ வேண்டுமெனில்....

# சின்னக் கணக்கு சொல்லும்
# குலத்தின் கதை

அபிமன்யுவை
கருவில் சுமந்தவளே!
இங்கே...
அசுரர்கள் சூழ்ந்து விட்டார்கள்.
சக்கர வியூகம் தகர்க்க
மார்க்கம் சொல்லித்தாருமம்மா!

செஞ்சோற்றுக் கடனுக்காக
சூது செய்தவனுக்கு
துணைபோன அண்ணனை
அடித்து வீழ்த்திய
அர்ச்சுன மகாராஜா
சோத்து பொதிக்கும்
சுட்ட கருவாட்டு புலானுக்கும்
சோரம் போன அண்ணன்மாரை
அறிவால் அடித்து
அபயம் தாருமம்மா..



ஐந்து ஆண்களிடம்
ஐயமின்றி
பெண்மை காத்தாய்
கற்புக்கரசியே!
துரியோதனன் துயில்
கலைந்த போது
கண்ணன் அருளினால்!
நீ சிலையாகினாய்!

உன்னை நினைத்தால்
அக்கினி குழிக்கூட
குளிரத் தொடங்குகிறது!
அத்தனை தெய்வத்தையும்
அம்மா என்றோம்
உன்னை மட்டுமே
அக்கா என்றோம்
தங்கா அக்கா என்றோம்!
தாயே சரணம் அம்மா!

# சரஸ்வதி..

தனுஷ் கோடியிலிருந்து
தள்ளாடி தள்ளாடி
நகரும் சரஸ்வதியில்
நூற்றி முப்பது பேர்
இக்கரையில் சடையன்
பெத்தாச்சியையும்,
பொம்மனையும்,
பேச்சியையும்,
தூக்கி வருவாறு அம்மான் என...
தலை மன்னார் கரையில்
புழுமணல் சூடு தாங்கி
குந்தி கிடந்தான்...!


ஆறு மணி நேரம்..
பதினெட்டு மணி ஆச்சி
அந்தா
ஒரே ஒரு தலை....
கூத்தாடி கம்ப புடிச்சு
நீந்திகிட்டு வருகிறான்.

'கூத்தாடி! எங்கடா.....
மத்தவங்களெல்லாம்...?'
உப்புத் தண்ணிக் குடிச்சிட்டே
சொன்னான்.
சரஸ்வதி ஏமாத்திப்புட்டாடா!
முழுப் பேரும்
கடலில பொயிட்டாக!


சடையன் பைத்தியம்
தலைமன்னாரில் திரிஞ்சிச்சி
அவனுக்கு தெரியும்
அப்ப மட்டுமல்ல
இருநூறு வருஷமாய்

அவள் வம்சத்தை சரஸ்வதி ஏமாத்த
போறக் கதை!

சரஸ்வதி பூஜைக்கு
ஏடு தொடங்கி என்னா
பொறசனம்?
புள்ளவுட்டு கொப்பி
புதுசாவே இருக்கு!
சடையனுட்டு வம்சம்
இங்க கோணகல சந்தியில
சொல்லிக்கிட்டு இருக்குது!
அதுக்கு போய் யாராவது
கொடி போடுவாங்களா?
அட! கலர் கலரா தெரியுதே!
என்னத்துக்குங்க அது!



# கிரேக் தோட்டம்



சின்னமுத்து.. நீ
பெரிய முத்துனு
இன்னிக்கு தெரியுது!

ஆலமரத்தடியில வேல்
அடிச்சுவச்சா போதும்!
மூலை பாறையில
அரைஞ்சு வச்ச கம்பி!
உச்சி மலையில
புதைச்சு வைச்ச கல்லு
இதுவெல்லாம் போதும்
வேறு என்ன வேணும்னு
கேட்ட பியாஸ் பவர் தொரைக்கிட்ட

கட்டினால் புதுக்கோட்டையில்
மதுரை வீர ராசா
கட்டினமாதிரி கோவில்
கட்டித்தரணுமுனு கேட்டியே!
இப்ப நெனச்சா இனிக்குது!

சிவராத்திரி, நவராத்திரி
கந்தசஷ்டி, ராமர் பஜனை
மாவிளக்கு பூஜை, அக்கினி சட்டி,
ஐயப்பர் பூஜை, அறநெறி வகுப்பு
எல்லாம் தோட்டத்திற்கு வர
காரணமானவர் நீ!

ஏழ்பாணத்திலிருந்து
எவரும் வந்து சொல்லித் தரவில்லை!
கொட்டகலையிலிருந்து கோபுர கலசம்
கொண்டு வந்து சேர்க்கவில்லை!
எல்லாம் பதுளைக்காரன் தானே உழைச்சான்.
தன்மானம் கொண்டு உயர்ந்தான்.

# பயங்கர உலகம்....

சின்ன மனுஷன் அவன்
பயங்கரமானவன்

மேலே இருப்பவனை கீழே
தள்ளுவான்
உள்ளே கிடப்பவனை
தலையிலே தூக்குவான்!

சின்ன மனுஷன் அவன்
பயங்கரமானவன்
ஆதரிச்சு வைச்சா
விசுவாசம் காட்டுவான்
ஆணவம் காட்டினா
தூசனம் பேசுவான்!

சின்ன மனுஷன்
பயங்கரமானவன்
கோயிலுக்கு போகச்சொன்னா
மேலுக்கு சவுரியமில்லையென்பான்
ஜெயிலுக்கு போவதென்றால்
கம்பி எண்ண தெரியாதென்பான்!

வேலு அப்பா இப்ப இங்க!
அடி, கிடி, இல்ல!
பிடிச்சு, பயங்கரவாதம்
பண்ணிய பயலுக இங்கதான்
இருக்காங்க!

பொய் கேசுல வந்து
நாலு வருஷமா கல்லு உடைக்கிறான்
பொழைக்க தெரியாதவன்!
வந்தவுடனேயே! குரு பக்கம் போயி...
சமைக்கிறேன

சோறுபோட சொன்னன்
சாப்பாடு பிரச்சினையில்ல
பாக்கிஸ்தான் இருப்பு குழு
[illegible]
எல்லாரும் உதவி செய்வாக
நீ! எலக்ஷன் வேளை!
இங்க சிரித்து இறங்கி வேலை செய்யு...



# தென்மதுரை சுரங்கம்


தலையில் கட்டிய
முண்டாசு சுற்றலாம் !
மேலும் கீழும் இரும்புச் சுற்று!

சுற்றி.. சுற்றி அப்பாவுட்டு
கொல்லை மாதிரி
அரை மணி நேரம் பயணம்.





பாதையில் சுற்றி நடந்து வரும்
காதல் சோடி
வாழ்க்கையின் துறுக்களை
புரிந்து கொள்ளலாம். தேவை
இருந்தால்.
என்ன செய்ய
நூறு வருஷமாய்! சோம்பேறி [illegible]
சுருண்டு கிடக்கிறது.
அபிவிருத்தி இல்லாமல் ஸ்டேஷன்.



# இதழ்கஸ்ஹின்ன தேயிலை தொழிற்சாலை

மலையகத்திற்கு மன்னன் நீ!
புனிமையில் ராகலையையும்,
ராஜகலையையும் மையங்கனைக்கு
அனுப்பிவைத்துள்ளாய்.

தொழில்நுட்பத்தில் கொங்கொடியாவையும்
கட்டப்புல்லாவையும் முக்காடு
போட செய்துள்ளாய்.
தூய்மை ஊழியரிடமும், உற்பத்தியிலும்
காண முடிந்தது
உயிரை விடப்போன தேயிலை தொழிலுக்கு
சேலேன் பாய்ச்சியது நீ!
உன்னைப் போலவே தொழிலாளர் மக்களையும்
பெறுமதி மிக்கதை மாற்றியமை
பாதைகளில் குழிகளில் இல்லாமல்
வழுக்கச் செய்கிறாய் உலகத்தை.

தொழில் நாகரீகம் மிகுதியாய்
தெரிவிக்க தொழிலாளி சிரிப்பு
இந்த தோட்டம்
மட்டுமே நிரந்தரமாய்
இருக்கிறது.

இயற்கை உரம், தினதாங்கி
செயற்கை மருந்தை
விவாகரத்து செய்துள்ளான்.



கவிஞர் நித்திஜோதி

இங்கிலாந்து அரண்மனை
பதுளை தேயிலை குடித்து
மகிழ்கின்றது என்று
மார்தட்டுபவனே!
காட்டிக் கொடுப்பவன்
இல்லாவிட்டால்
கருமாரி துணை கரத்தால்
ஊவாவே மலையகத்தில்
உயர்ந்து நிற்கும்
ஞானசேகரத்தான் இந்த
ஞாலம் புகழ் கொண்டாரே.




# நீர் வீழ்ச்சி

இராவணன் நீராடி மகிழ்ந்த
எல்லை நீர் வீழ்ச்சி!
சியன்கல்ல தோட்ட எம்பட்டி
மலை துப்பிவிட்ட ஊற்று!

தியலும நீர் அருவி.
நாவுல தோட்டம் கால் கழுவி
ஓடவிட்ட செம்பு நீர்!


பம்பரகந்த உயர் நீர் வீழ்ச்சி!
வெஸ்ட் அப்புத்தளை தோட்ட மக்களுக்கு
புனித பூப்பு நீராட்டு நடக்கிறது!

துங்கிந்த எல்ல அருமையான
நயகராமாதிரி பொங்கி வீழ்கிறன
தோட்டங்கள் வான் கதவு திறந்து
விட்டார்கள்.



# காதல் சிறை

ஏய் பௌசி!
உன்னைக் கேட்காமலே
இதயத்தை
பறித்தெடுத்த குற்றவாளியை
கைதியாக்கி சிறை வைக்க
கேட்டேன்
நீயோ... இப்போதே!
கருணை மன்னிப்பு தருவதாக
அவசரப்படுத்துகிறாய்!



இப்போது...
அப்புத்தளை கூதல்கூட
குளிரவில்லை!
உனது நெருப்பு கண்கள்
என்னை சுட்டப்பிறகு!

நீ! நோன்பை
கலைந்து விடு
நோவும் நெஞ்சுக்கு
இதமாய் சேதி சொல்லு!
பௌஸியா...
இதயம் எரிய வைத்தாய்
ஏழு பிறவி சாபம் தந்தாய்!
ஊதி அணைத்து விடு
ஊதும் இதழால் அணைத்துவிடு
வாழ்ந்த பின்பு வாழ்வு
எல்லாம்
முகத்திரை விலக்கி
முடிவு சொல்ல வேண்டும்!

உன்னை
தாஜ் மகால் கட்டி
காத்திருக்க நான்
சாம்ராஜ்யம் வைத்திருக்கவில்லை!

நொடிக்கு நூறுதரம்
அடித்துச் சொல்லும்
இதயமட்டுமே என்னிடமுள்ளது!

ஆசையை மட்டும்
கட்டிப் போட்டு மல்லுகட்டிடும்.
கண்ணீர் துளிக்குள்
நின் உருவம் இருப்பதால்
துடைக்கவில்லை!
முடியுமானால் கைக்கொடு...
முடியாவிட்டால்
முதல் குழந்தைக்கு
எனது பெயரை
எடுத்துச் செல்...
முகவுரையும்
முடிவுரையும்
வரையக் கூடிய
சித்திர ஆசிரியை
நீயே!
ஓ! பௌஸியா!
புகை வண்டி கூட
பச்சை விளக்கை
எதிர்பார்க்கிறது!
நானோ!
பச்சை சல்வாரில்
உன்னை .....!



# காமன் விடு தூது..

மாசி மலர்ந்தால்
மனசு மத்தாப்பு கொழுத்தும்

ரதியும், மன்மதனும்,
வில்லடித்து ஆடுவார்கள்
சிவன் நெற்றிக்கண்ணைத்
திறக்கும் முன்
தூதுவன்
எச்சரிப்பான்
எச்சரிக்கையில் பின்
எரிக்கப்படுவது
ஆச்சரியப்படும் செயலல்ல!

கண்ணீருக்கு
கல்லும் கரையும்
மகளுக்கு இறைவன்
இறங்க மாட்டான்!

வாழ்க்கையின்
இன்பம், துன்பம்..
இரண்டையும்
ஒரு நாள் இரவில்
'பாலாறு'
சொல்லிக் கொடுக்கிறது.

சூரிய வம்சத்திற்கு
பௌத்தர்களும்,
இஸ்லாமியரும்
இந்திய வம்சத்தின்
இலக்கிய வடித்தில்
மெய்மறந்து
மனசுக்குள்
ஆராத்தி எடுக்கின்றனர்.




# மாதவி....

அறம் தவறியது..
பத்தினியால்
மதுரை எரிந்தது...
மாதவி மகள்
மணிமேகலை
மஞ்சல் ஆடைக்குள்
சரணடைந்தாள்..

புத்தம் சரணம் கச்சாமி
தர்மபதத்தில் உறைந்தாள்!
அவளுக்கு!
அரசனின் தவறுக்காய்
ஊரை எரித்தது பிடிக்கவில்லை!

மாகவி ஏடு எடுத்தான்
மதுரைக்கு பெருமை எழுதிய
மணிமேகலையை
காவியப்படுத்தினான்
நம்பூதரிகள் ராமா, ராமா
பாடாமலிருந்திருந்தால்
தமிழ் மனைகளில்
தர்மம் சரணம் தொடர்ந்திருக்கும்.



# பதினாறு வயது விதவை




அக்கினி மழை
பொழியாவிட்டால்
என்னடி தோழி
பொசுங்கிப் போனது
என் வாழ்க்கை!

சீதை தவமிருக்க
சுவர்ண கமலத்தை
கொண்டுவர
இரட்டையர் இருந்தனர்!
எனக்கு யார்!


திரௌபதை கதறிய போது
கண்ணபிரான்
தர்மசக்கரம் எடுத்தாராம்.
கல்கி கூட வரவில்லை!
ஆந்திரா
மாஞ்சோலை தோட்டத்தில்
மனித சங்கிலிப் போராட்டம்
வேதனம் கேட்டுதான்
வீழ்ந்தான்... வேலுசாமி!
விதவையானால் வெள்ளையம்மா!

இங்கே ..
முல்லோயா கோவிந்தன்...
சேர்வுட் வயிரமுத்து.
டெவன் சிவனுவ்.
சொற்களில் எழுத
கரங்கள் உண்டு..
அங்கே....
சர்வதேச கூலிகளுக்கு
அடிமைகளின் விலங்குகளே!
ம்...ம்... மூச்சு!




# நாணயம் மனதில்

கல்முனைக் காரர்
கதிர்காமப் பதியில்
கற்பூரம் ஏந்தி
அர்ச்சனை முடிய!
இருநூற்றி எழுவது ரூபாய்
எங்கோ ஒளிந்தது!



மூன்று குழந்தைகள்
முருகாவென சொல்லி
கலங்கினார்!
அருகில் வந்தார்
முத்துப்பண்டா!
அறுபது ரூபாய் கொடுத்தார்!


மஞ்சள் கோட்டில்
பண்டாரன் வளைவில்
பெறாமகன் நடந்தான்
ஆயிர ரூபாவில்
அழகான சிரிப்பு!
அடுத்தவன் குறிவைத்தான்!
மல்லி! சல்லி என்றான்!
அன்று கதிர் பதியில்
பணத்தை இழந்து
வைரமுத்து அதிபருக்கு
ஒரு வகையில்
வளர்ப்பு மகன்
அதனால்
இங்கே நில் அதிபாரன்தான்
இன்முகத்துடன்.



# ஆட்ட நாயகன்

எங்கள் வீட்டுப் பிள்ளையென
எம்.ஜி.ஆருக்குப் பிறகு
உன்னைத்தான் சொன்னோம்!

புயல் வேகப்
பந்தைக் கண்டு
அயல் எல்லை வரை
அடித்து அனுப்புபவனே!
ஐம்பது
கடவுளுக்கு காணிக்கை தந்தாய்!
சின்ன வயதினிலே!
சாதனை ஏடு திறந்தவனே!
ஒரு தேசம் கண்கள்
பார்க்க தீவில்..!
அர்ச்சனை பார்வைத்தாவும்
ஆட்ட நாயகனாக வா!



# கொழுந்தைக் காப்பீர் ...!

எத்தனை மரம் மண்ணில் துளிர்த்தாலும்
எழில் காட்டி இலை விரித்துச் சிரித்தாலும
இத்தரையில் கொழுந்தென்றால தேச் செடிதனில்
இளமையோடு முளையெடுக்கும் நானே நற்கொழுந்து...

கன்னியர் எனக்கு 'கண்ணி' யாகி - தம்
கரங்களிலே கொய்து செல்ல நிரை முடியும்
குன்றின் மனிதர் போல் 'தியாக' (ம்) முந்தக்
குளிர்ந்து போய் பொலிகேட்க உயிர் கொடுப்பேன்

சூடான வெப்பக்காற்றில் காயவிட்டு ..... என்
'சூக்கும்' உடலை பகுத்தாய்வது போல் ... மூன்றாம்
மாடத்தின் உச்சியிலே வதைகள் செய்து
மடக்கி, அடக்கி வைப்பவனோ 'எமதர்ம' தூதன்? பின்பும்

குண்டான உருளையிலே போட்டுமென்னை
குடு, குடுவென்றே உருட்டி, அரைத்து வாட்டி,
சண்டாள அரித்தட்டில் சலித்து, சலித்து ...... மனித
சாதிப்பிரிவுகளை எம்மினத்தும் சூட்டி வைப்பீர்கள்!


என்றாலும், எந்நாளும் எனக்கோர் நிம்மதி
எம்மினத்தின் இரத்தம் இத்தரையில் உறையும்
அன்பான செந்தமிழர் வாழத்தான் வளமாகுவதால்
அடுத்தடுத்து கொழுந்தாக செகத்திலே முளைப்பேன் ... ஆனால்

குறிஞ்சிக் குலத்திற்கே குழிபறித்து தொழிலாளர்
குடும்ப விளக்கை அணைக்கும் கொடும்பாவிக்கெல்லாம்
நெருஞ்சியிலே போய் விழுந்த பட்டுப் போல ....
நேர்மாறாய்க் கொழுந்து மாலை போடலாமா?

# தொழிலாளர் துயில்மனை

நெட்டயன்
வெள்ளைக் குதிரையாக
ஹி ஹி எனக் கனைப்பான்
ஆம் என்று மட்டும்
தலையாட்டச் சொல்வான்
இல்லை என்பது
அவனது அகராதியில் இல்லையாம்.
கறுப்பன் எவனும்
சட்டம் கதைத்தால்
எட்டி உதைக்க
காலத் தட்டுவான்!
ஏங்கி நின்றால்
பிச்சை காரனாய்
ஓடு என்பான்!
'Do what I say'
என்பான்!

ஆசிரியரை 'மாஸ்டர்' என்பான்
கறுப்பு சிங்களருக்கு
கல்லெறியச் சொல்வான்!
காட்டில் தெரிந்த குடிசைக்கு
நெருப்பை மூட்டச் சொல்வான்.
சவுக்கு எடுத்து குமரிகளின்
பின்புறம் அடிக்க வருவான்.



தொழிற் சங்க கொடி கழற்றி
குப்பை மேட்டில் ஏறியச் சொன்னான்
எத்தனை பேர் வந்தாலும்
ஒருத்தன் உதைத்து அனுப்புவேன்
என்றான்!

அந்தோ. "நாற்பத்தெட்டுநாள்"

போராட்டம்
சங்கக் கொடி வந்தது..
வெள்ளையன் கப்பலேறினான்.
மலையக தோட்டத்தில்
சுதந்திரம் நிலைநாட்டிய தொழிலாளர்
அங்கு நடக்கும் கொடுமைகளை
கண்டு விழித்து எழும்புவார்!
அன்னியருக்கு அடிமையாய்
ஆவதனை பார்த்து!
புல்லருக்கு பாடம் புகற்றச்சொல்ல
அந்தரங்கம் பேசுவார்.
புரட்சித் தலைவனை வாழ்த்துவார்.

(குட்லிவர் என்னும் வெள்ளையனை
எதிர்த்து வெற்றிக்கண்ட
தொழிலாளிர் இங்கே துயல்கின்றாய்
- பூனாகலை





# படர்கொடி...

'மாளிகா தென்ன'
மசண்டை இருட்டு
மப்பில் தள்ளாடி
நடந்தான் முத்து கவுடன்!

கள்ளு குடிச்சதா அய்யே!
கவனமாய் யண்டயென...
பிளந்த பப்பாசிகாய்க்குள்
விளக்கேற்றிக் கொடுத்தாள்
படியேறிச் செல்ல
கைக்கொடுத்து நடந்தாள்!

பாறை விரிப்பு பக்கத்தில்
சல சல நீர் ஊற்று
ஊதல் காத்து ஊடல் செய்து
விளக்கை அசைத்தது!
வேடிக்கைச் செய்தது!
ஒளியை காப்பற்ற
கைகளை இணைத்து
கஸ்ட்டப்பட்டபோது!
விளக்கு விழுந்தது!

கும்மிருட்டில் கைகளை
அசைத்து விளக்கைத் தேட
கைகள் எங்கெங்கோ தொட்டன
விரல்கள் எல்லைக்கேச் சென்றன!



அவன் கள்வெறிப் பிடித்திருந்தது
முரட்டு தனத்தின் மோதலும்
இனித்துக் கிடந்தது!
ஹாமினி என்றான் அவன்
அத்தான் என்றாள் அவள்
ஆமிக்கு போன புருஷன்
காணாமல் போன பின் .....!



# நூலக கீதம்
## ஊவா நூலகச் சபை


ஞாலத்தை அறிவோம்
தகவலை தெரிவோம்
ஞானசக்தியின் ஞானக்கடலே
தொடுவானில் நல்லாசிகள் பெற்ற
நூலகத் தாயே நீடு வாழ்க

மாந்தர் மனங்களை மகிழ்வூட்டி
நிம்மதி தருகின்ற நேய ஊற்றே
விரிந்த தகவல் தாமரை வாசனை
உதிக்கும் ஒளிச்சுடர் ஊவாவிலே!

தூய இலங்கை இரத்தின மாடம்
சீராய் எழில் யுகத்தின் ஜோதி
மலர்ந்த ஞானச் சாரல் தழுவியே
உதிக்கும் ஓர் உதயம் ஊவாவிலே

---

சிங்கள மொழியான நூலக கீதம் தமிழ் மொழியில் பாடுவதற்கு ஏற்ப இயற்றப்பட்டு 2010 நவராத்திரி தினத்திலே பாடப்பட்டது. ஏனைய மாகாண நூலகச் சபைகளும் தமக்கென நூலக கீதங்களை வடிவமைத்துகொள்ள முயற்சிகளை முன்னெடுக்க வழிகள் உண்டு?



திராவிடர் பண்பாட்டினை
ஊவாவில் விதைத்த
புரட்சியாளர் **தமிழோவியன்**
பெயரில்
புலமைப் பரிசில் - 2011